# தூறல்கள்






**கலாசார மன்றம்**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**கோப்பாய்.**

**2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூறல்கள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய் – யாழ்ப்பாணம்.

16 ஆம் அணியினர்

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடாதிபதியின் ஆசிச்செய்தி



**உயர் திரு.ச. அமிர்தலிங்கம்,**
**பீடாதிபதி,**
**யா.தே.க.கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பதினாறாம் அணி முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள் கல்லூரிக் காலத்தில் வினைத்திறனாகவும், வெற்றிகரமாகவும் செயலாற்றி 2018ம் ஆண்டு உள் ளகப் பயிற்சியினைப் பெறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் இவ்வுலகம் போற்றும் வாண்மை ஆசிரியர்களாக விளங்க வித்தக விநாயகரின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றேன்.

இன்றைய நவீன உலகில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியும் விஞ்ஞான விருத்தியும் நாளுக்கு நாள் பரிணாம வளர்ச்சியடைந்து கற்றல் கற்பித்தலில் மிக வேகமாக செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இம் மாற்றங்களினால் இன்றைய மாணவர்களின் கல்வித் தேவையும் பரந்து பட்டதாக அமைகின்றது. அதற்கேற்ப ஆசிரியர்களும் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டியது காலத்தின் தேவையாகும். உண்மையில் ஆசிரியர்கள் தொழில் புரிபவர்களல்ல, சேவை செய்பவர்கள். எனவே ஆசிரியத்துவத்தை தொழிலாக கருதாது ஒரு சேவையாகக் கருதி இன்றைய சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தனை யுடனும் செயலாற்ற உங்களுக்கு மனவுறுதியினையும், இறை ஆசியையும் வேண்டு கின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியானது பல்வேறு பிரதே சங்களிலும் இருந்து வந்த பதினாறாம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களை அன்புடன் அரவணைத்து மகிழ்ச்சிகரமான கற்றற் சூழலில் கற்றல் கற்பித்தல் மட்டுமல்லாது இணை பாடவிதானச் செயற்பாடுகளையும், ஆளுமை மிக்க விழுமியப் பண்புகளையும் விதைத்துள்ளது என்றால் அது மிகையாகாது. ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள் பாடசாலைகளில் உங்கள் ஆளுமையின் மூலம் சிறந்த மாணவர்களை இந்நாட்டிற்கு உருவாக்கிக் கொடுத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன், நீங்கள் ஒவ்வொருவரும் உள்ளகப் பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து கொள்ளவும், எதிர்காலத்தில் சிறந்த நல்லாசிரியர்களாகத் திகழ்ந்து உங்கள் பணி சிறக்கவும், வாழ்வு வளம் பெறவும் எனது நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றக்காப்பாளரின் வாழ்த்துரை



திரு.க. திலகநாதன்,
விரிவுரையாளர்,
யா.தே.க.கல்லூரி,
கோப்பாய்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 16ம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களாகிய நீங்கள் இரண்டு வருடகால உள்ளக பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்து விட்டு வெளியக பயிற்சிக்காக பாடசாலைகளில் கால் பதிக்க ஆயத்தமாகயுள்ள இச்சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் வினைத்திறனான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினூடாக மாணவர்களிடம் காணப்படும். பல்வேறு திறமைகள், ஆளுமைகள், ஆற்றல்களை வெளிக்கொண்டு வந்து அவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக மாற்ற வேண்டும்.

இத்தகைய மேன்மைப் பணிக்கு நீங்கள் சென்ற இடம் எல்லாம் பிரகாசிக்க எல்லாம் வல்ல வித்தக விநாயகர் அருள் புரிய வேண்டும் என உங்களை வாழ்த்துவதோடு புதியதோர் சரித்திரம் படைத்து உங்கள் வாழ்வு சிறக்க எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

அத்துடன் 16ம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களின் பிரிவுபசாரத்தை முன்னிட்டு "தூறல்கள்" எனும் சஞ்சிகையை 17ம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களுடன் இணைந்து வெளியிடுவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
# கலாசார மன்றம்
# 2018

| | | |
|---|---|---|
| போசகர் | :- | உயர் திரு. சதாசிவம் அமிர்தலிங்கம்<br>பீடாதிபதி,<br>யா.தே.க.க. |
| காப்பாளர் | :- | திரு.க. திலகநாதன்<br>விரிவுரையாளர்,<br>யா.தே.க.க. |
| தலைவர் | :- | விஜயகுமாரன் விவேக் |
| செயலாளர் | :- | கலாதேவன் ஜெனனி |
| பொருளாளர் | :- | துஸ்யந்தன் சர்வதனரூபன் |
| பத்திராதிபதி | :- | கோணேஸ்வரன் சதுர்ஷா |

## துறை சார்ந்தவர்கள்

1. விசேட கல்வித்துறை - சஞ்சிகா ரவிதாஸ்
2. கணிதப்பிரிவு A - ஜெயநாதன் ஜெயவர்மன்
3. கணிதப்பிரிவு B - சிங்கநாயகம் ரகுராஜ்
4. விஞ்ஞானப்பிரிவு A - கணேசமூர்த்தி துவாகரன்
5. விஞ்ஞானப்பிரிவு B - குலேந்திரன் கனிஸ்ரன்
6. ஆரம்பப்பிரிவு A - ரவிக்குமார் ஜெயவனி
7. ஆரம்பப்பிரிவு B - தெய்வம் தர்மிகா
8. ஆங்கிலப்பிரிவு - சிவகுமார் ஜெனோசா
9. நடனத்துறை - செல்வநாயகம் ஜெயசங்கரி
10. இசைத்துறை - ஜெயானந்தம் டிலக்சனா
11. சித்திரத்துறை - ம. நுஸ்கா
12. விஞ்ஞானப்பிரிவு (ஆங்கிலமொழி மூலம்) - சந்திரபாலன் இளவேனி
13. கணிதப்பிரிவு (ஆங்கிலமொழி மூலம்) - உதயசீலன் அபிலாசினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை பெறும் உறவுகள்

அகரம் எழுதிய விரல்கள்
சிகரம் தொடும் கரங்கள்
பகிரும் அன்பும் அறிவும்
பகரும் கல்லூரி வாழ்க்கை

ஏன் இந்த சாபம் நமக்கு
எங்கு சென்றாலும் பிரிவு நமக்குள்
ஏன் இந்த சோகம் என்றதும்
அங்கு தான் கிடைக்கிறது ஓர் விடை

எட்டு திக்கிலும் இருந்து - இங்கு
பட்டு பூச்சிகள் போல் வந்து
கூட்டுப் புழுக்களாய் வளர்ந்து
நாட்டு சேவைக்காய் படித்தீர்

இரு வருடங்கள் ஒன்றாய்
இருந்தீர் - ஆனால்
பல வருடங்கள் கழிந்தது
போல் ஒரு உணர்வு

அன்று உவகையுடன் வந்திட்டீர்
அவாவுடன் படித்திட்டீர் - இன்று
நீங்கள் கவலையுடன் வெளியேற
வலியுடன் விடையளிக்கும் தருணமிது

எம் இனிய சகோதர சகோதரிக்காய்
இன்று ஒரு நாள் - அன்று
எம்மை வரவேற்க முகத்தில்
புன்முறுவலுடன் வந்தீர் - இன்று
உம்மை வழியனுப்ப விழியோரம்
கண்ணீருடன் உம் சகோதரமாய்
என்றும் உம் ஆசிரியப் பணி
மென்மேலும் சிறக்க
எம் இதய பூர்வமான வாழ்த்துக்களுடன்..........

17th batch JNCOE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்பக்கல்வி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- PIRATHAMINI YOGESWARAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/02
ADDRESS :- MAVADY ALAYA ROAD, CHANKANAI
D.O.B :- 16/11/1993



பெற்றாரும் உற்றாருமின்றி
தன்னந்தனிமையிலே உறவுகளின்றி வருகையிலே
இன்முகத்துடன் அழகிய மலர்ச்செண்டு தந்து
அன்புடன் வரவேற்ற அக்காவே
நீர் மேலும்மேலும் பல பட்டங்கள் பெற்று
மேன்மையுற வாழ்த்துகின்றோம்.

---

NAME :- THUJANTHY NAGALINGAM
REG.NO :- 15/JNCOE/PT/T/F/190
ADDRESS :- HOSPITAL ROAD MULANKAVIL
D.O.B :- 28/07/1992



பல கதைகள் பேசி பலர்
மனதில் இடம் பிடித்த மங்கை நீ
உன் புகழ் அவனி எங்கும்
பரவிட வாழ்த்துகின்றோம்.

---

NAME :- SUBASHINY VINAYAGAMOORTHY
REG.NO :- 15/JNCOE/PT/T/F/67
ADDRESS :- KADDAIVELI ROAD,
KARAVEDDY EAST KARAVEDDY
D.O.B :- 03/02/1994



குரலிலே வீணையை மீட்டியவள்
குணத்திலே மேன்மையைக் காட்டியவள்
சுபத்தை தன்னகத்தே கொண்ட பெண்மையிவள் ...
உந்தன் புகழ் மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- KOWSHIKA SATHTHIYASEELAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/262
ADDRESS :- G.S LANE, POINT PEDRO ROAD,
KODIKAMAM JAFFNA
D.O.B :- 13/09/1994



அமைதியான சாந்தமான
முகத்தில் – மென்மையான
புன்னகையை உடைய
கௌசிகா அக்காவே....
சுடர்விட்டு எரியும் – தீபமாய்
உங்கள் வாழ்க்கையும்
பிரகாசிக்கட்டும்.

NAME :- JEYANTHINI BASKARAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/90
ADDRESS :- 1202, SUNDDIKKULAM ROAD,
KILINOCHCHI.
D.O.B :- 13/10/1994



நட்புக் கொள்ள – ஒரு
தோழியாக
ஆசையுடன் பழகிக்கொள்ள ஒரு
அக்காவாக
ஓர் சில நாட்கள்
பழகினாலும்
என்றும் – உன்
புன்முறுவலின் நட்புக்காய்
காத்திருப்பேன் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- THANUSHIKA KULANAYAGAM
REG.NO :- 15/JNCOE/PT/T/F/218
ADDRESS :- IRANAI ILUPPAIKULAM VAVUNIYA
D.O.B :- 13/08/1994



கலையாத உன் கனவுகளை
கண்ணியமாய் நீ பெற்று
கலங்காத ஒளி தீபமாய்
காலமெல்லாம் வாழ வாழ்த்துகின்றோம்.

NAME :- PRIYADARSHINI IYADORE
REG.NO :- 15/JNCOE/PT/T/F/92
ADDRESS :- NO 67, KARUGALICHOLAI MUDEL
D.O.B :- 04/02/1994



யாழ் கல்வியியற் கல்லூரியில்
பல கலைகளையும் கற்க
வந்திருக்கும் அக்காவே
நீர் படிப்பை நிறைவு செய்து
ஆசிரியப் பணியில் மிளிர
வாழ்த்துகின்றோம் உம்மை

NAME :- DANENDRI YOGARATHAM
REG.NO :- 15/JNCOE/PT/T/F/05
ADDRESS :- 58/02, FIRST LANE CIRCULAR ROAD
KALUDEWALA MATALE
D.O.B :- 12/03/1994



வானம் வந்து வாழ்த்தும்
வண்ணப் பூக்கள் வந்து தூவும்
வருங்கால வாண்மை மிகு ஆசிரியரை
கொஞ்சிக் குலாவும் சுட்டிக் குழந்தைகளுடன்
நீயும் விளையாடி வகுப்பறையில்
மகிழ்ந்து கற்பிக்க வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- DISHANTHINI SACHCHITHANANTHARASA

REG.NO :- 15/JNCOE/PT/T/F/03



ADDRESS :- 784/15 VALAMPURI ROAD 3[RD] MILEPOST, TRINCOmale

D.O.B :- 24/02/1994

கல்லூரிக்கு அழுது வந்த என்னை
தங்கையாய் அரவணைத்து ஆறுதல்
தந்த அக்காவே உன்
பிரிவு துன்பம் தந்தாலும் – உன்
புகழ் பாரினில் பரவிட – இறைவனை
வேண்டி வாழ்த்துகின்றோம்.

NAME :- KAJEPANA MUTHULINGAM

REG.NO :- 15/JNCOE/PT/T/F/99



ADDRESS :- VARAKI AMMAN KOKILADY, KOKUVIL WEST KOKUVIL, JAFFNA.

D.O.B :- 30/09/1994

சகோதர பாசம் உணர்ந்தேன்
உம் பண்பான கவனிப்பிலே
போராடி நாம் ஜெயிக்க
ஊன்று கோலாய் நீர் இருந்தீர்
உம் அளவற்ற அக்கறையில்
மெய்சிலிர்த்தேன் நான்
வாழ்வில் பல வெற்றிகள் பெற்றிட
வேண்டுகின்றோம் கடவுளை உமக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- NIROJANA JEYAKUMAR
REG.NO :- 15/JNCOE/PT/T/F/124
ADDRESS :- WARD NO 04, SAMPALTHIVU, TRINCOMALE.
D.O.B :- 27/04/1994



இன்மொழி பேசும் உங்கள் செவ்விதழ்மொழி
இனிய செம்மொழிக் கொத்தே
கல்லூரித் தாய் தந்த
உடன் பிறவா சகோதரியே
உம் இனிய பண்பான அன்பு தான்
நற்பண்புகளின் விதையில்
நம்பிக்கையூட்டும் கோதையாய் விளங்கும் - நீங்கள்
என்றும் நல் ஆசானாக மின்னி வலம்வர
என் இனிய வாழ்த்துக்கள்.

NAME :- VITHUSHA VI JAYARETHAM
REG.NO :- 15/JNCOE/PT/T/F/121
ADDRESS :- 853, SCHOOL LANE,
SELVANAYAGAPURAM, TRINCOMALE.
D.O.B :- 17/02/1994



இளமைத்துடிப்பும் இதமான புன்முறுவலும்
விளையாட்டு மைதானத்தில் உம் தரிசனம்
ஆரம்பக்கல்வித் துறையின் அகல் விளக்கே
அறிவில் சிறந்திட உமை மனதார வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- KAMSHIKA NAGENTHIRAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/07
ADDRESS :- 79/1, SUTHUMALAI,
SOUTH ANNAICODDAI, JAFFNA.
D.O.B :- 07/07/1993



பார்த்தது பல நாட்கள்
பழகியது சில நாட்கள் – எனினும்
நின் பரிவது கண்டோம்
உம் புகழதை வியந்தோம்
பட்டங்கள் பல பெற
அவனியில் புகழ் வளர
யாம் வாழ்த்துகின்றோம்.

NAME :- MATHANKI RAKUNATHAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/235
ADDRESS :- SITTAMPALAM ROAD,
MEESALAI EAST, MEESALAI.
D.O.B :- 15/06/1994



ஆரம்பக்கல்வித்துறைக்கு மேன்மை சேர்த்திட
JNCOE க்கு வந்த முகிழ்நிலை மொட்டே
மாண்புற மண்ணிலே சேவையாற்றி
பட்டங்கள் பல பெற்று
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- THINESHIKA SRITHARAN

REG.NO :- 15/JNCOE/PT/T/F/65

ADDRESS :- KENIYADI LANE, MEESALAI WEST, CHAVAKACHCHERI.

D.O.B :- 03/02/1994



ஆருயிர் அக்காவே
உன் பேச்சும்
அழகான மனதும்
என்னைக் கவர்ந்ததேனோ
சிரிக்கும் போது
கன்னத்தில்
விழுந்த குழியிலும்
உன் அழகினை
சொல்லிவிட வார்த்தைகளில்லையே .

NAME :- THURKASINI SELVARASA

REG.NO :- 15/JNCOE/PT/T/F/260

ADDRESS :- NO77, KANTHIVILLAGE KONAVIL, KILINOCHCHI.

D.O.B :- 14/05/1993



எம் கல்லூரியில்
மொட்டாய் மிளிரும்
அக்காவே நீர்
பூவாக மலர்ந்து
பாடசாலைகளில் மணம்
பரப்ப வாழ்த்துகின்றேன் உம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- THAMILSELVI NAKARASA
REG.NO :- 15/JNCOE/PT/T/F/184
ADDRESS :- ST.ANTHONY'S CHURCH LANE, ATCHUVELY NORTH, ATCHUVELY.
D.O.B :- 01/11/1994



சுதந்திரப் பறவையாய் நீ
சுடர்விடும் நிலவும் நீ
இனிமையின் சேர்க்கையாய்
தித்தித்திடும் நினைவு நீ
நின் கனவது பலிக்கும்
இவ் வாக்கது எதிரொலிக்கும்
தம் புகழது பாடும் நாள் .

NAME :- KANNIKA KIRUSNAMOORTHY
REG.NO :- 15/JNCOE/PT/T/F/191
ADDRESS :- VELANAI WEST, WARD NO 06, KANNAPURAM, JAFFNA.
D.O.B :- 01/04/1993



நிலமது நோகாமல்
நீண்ட வார்த்தை பேசாமல்
பண்பின் உருவாய் நடைபோடும்
ஆரம்பப்பிரிவு அழகியே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- ABIRAMI PONNAMPALAM
REG.NO :- 15/JNCOE/PT/T/F/212
ADDRESS :- NO 223/59, 7[TH] LANE,
KOVILPUTHUKULAM, VAVUNIYA.
D.O.B :- 10/12/1994



அமைதிப் பூங்குழலாய்
உன் அழகின் எழில் ரசித்து
நட்பாகி நாளாகும் முன்னே
பிரிவிற்காய் வரி வழங்கி
கல்லூரிக் கால ஈற்றில் நின்
கனவது ஈடேற
வேண்டுகிறேன் இறைவனையே

NAME :- MOHAN MOHANRAJ
REG.NO :- 15/JNCOE/PT/T/M/64
ADDRESS :- KUMARALINGAM LANE,INUVIL EAST
D.O.B :- 08/06/1992



இணுவையூரின் மைந்தனே...
ஈடு இணையில்லா வீரனே....
விளையாட்டு உலகின் விருட்சமே...
சகல துறையிலும் சகலகலாவல்லவனே...
சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NAME :- SOUNTHARARASA JEYALAVAN
REG.NO :- 15/JNCOE/PT/T/M/187
ADDRESS :- SAMPUR-06 MUTUR, TRINCOMALE.
D.O.B :- 06/10/1994

ஜெயம் என்பது வெற்றியை குறிக்கும்
வெற்றி என்பதையே பெயராக சூடி உள்ள நீ
இவ் உலகில் வெற்றி வாகை
சூட வேண்டும் கல்வியில்



NAME :- NUSRA RAHMATHALLAH
REG.NO :- 15/JNCOE/PT/T/F/126
ADDRESS :- 87/V, MUDALAIPALI, KALPITY.
D.O.B :- 22/12/1993

அன்பின் உறைவிடமே
அமைதியின் சிகரமே
அக்கா இல்லாத எனக்கு
அக்கா அம்மா என்று உணர வைத்தவரே
உம் கனிய பேச்சினால்
எம்மை உம்பால் ஈர்த்தவரே
உம் அன்பிற்கு என்றும்
என்னை அடிமையாக்கியவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- HARSHINI THANGAVEL
REG.NO :- 15/JNCOE/PT/T/F/123
ADDRESS :- 6TH MILEPOST, KONESHAPURI.
D.O.B :- 27/01/1994



நெஞ்சு கனத்து நொந்து வந்த போது
இன்முகத்தோடு ஆறுதல் கூறிய அக்கா
அக்கா என்று அழைத்தவுடனேயே
பாச மழையை பொழிந்திடுவீர்

---

NAME :- F.SIHANA MOHAMMEDHU LEBBE
REG.NO :- 15/JNCOE/PT/T/F/125
ADDRESS :- NO 11, ULPATHA, GANEWALPOLA.
D.O.B :- 17/02/1994



பண்பான பேச்சும் - கனிவான
பார்வையும் கொண்டவரே நாம்
கல்லூரிக்கு வந்த போது
எம்மை இன்முகத்துடன் வரவேற்று
கல்லூரி நடைமுறைகளை அன்புடனும்
பண்புடனும் கற்றுத் தந்தீர்கள்
இத்தரணியில் பல பட்டம் பெற்று
உயர்ந்திட மனதார வாழ்த்துகின்றோம்

---

NAME :- KATHAREENA ANTON
REG.NO :- 15/JNCOE/PT/T/F/211
ADDRESS :- NO 348, 1ST LANE UKKULAMKULAM, VAVUNIYA.
D.O.B :- 20/03/1994



உன் மென்மை கண்டு
மெய்சிலிர்க்கும் தருணங்கள்
யாவும் உன் Presentation
இல் வாயடைத்து போனதம்மா
உயர்வு பல வாழ்வில் கண்டிடவே
மனதார வாழ்த்துகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- ANUSHA VIJAYAKUMAR
REG.NO :- 15/JNCOE/PT/T/F/95
ADDRESS :- NO 249, KILINOCHCHI.
D.O.B :- 27/06/1993



கல்வியற் கல்லூரி எனும் பூந்தோட்டத்தில்
வண்ண மலராய் பூத்தாயே எங்கள் அனுஷா நீ
மெல்லச் சிரிப்பால் கொள்ளை கொண்டது
போதாதென்று உன் தமிழின் திறமை
காட்டி ஈர்த்தாயே எம்மையெல்லாம்
காலங்கள் பல கோடி உயர்வுகண்டு
நீ வாழ்ந்திட மனதார வாழ்த்துகின்றோம்

NAME :- SAFEENA ISMAIL
REG.NO :- 15/JNCOE/PT/T/F/93
ADDRESS :- IRAKKA KANDY, TRINCOMALE.
D.O.B :- 23/05/1994



யாழ் தேசிய கல்வியற் கல்லூரி
வளர்த்தெடுத்த முகிழ்நிலை ஆசிரியையே
ஞாலம் போற்றும் சமூகத்தைப் படைக்க
இறைவன் அருளிய நன்கொடையே
இத்தரணியில் பல பட்டங்கள் பெற்று
சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்திடவும்
இறை ஆசியுடன் உம் வாழ்வு செழிக்கவும்
மன நிறைவுடன் உம்மை வாழ்த்துகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- RISNAS BEGAM SEYATHU MOHAMATHU
REG.NO :- 15/JNCOE/PT/T/F/210
ADDRESS :- 197/A, SANAGI MAWATHA, KANTALAI.
D.O.B :- 03/09/1993



முன் பின் தெரியாது
முகம் அறியாது
முகவரி புரியாது
கிடைத்த மூத்த சோதரியே
இனம் புரியாத உறவானாலும்
இதயங்கள் ஒன்றாகி விட்டன
மனதார வாழ்த்துகின்றேன் - என்றும்
மகிழ்வுடன் கூடிய வாழ்க்கைக்கு

NAME :- JANANY PADMANATHAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/63
ADDRESS :- NO 46 THIRUMALPURAM, JAFFNA.
D.O.B :- 19/08/1994



பருத்தித்துறையில் பதிகொண்டவளே
பத்மநாதனின் அன்புக்குரிய புத்திரியே
ஆரம்பக் கல்வியின் நட்சத்திரமே
முத்துப் புன்னகை இருக்கட்டுமே உம்முடன்
என்றும்
புதுவரவாய் பார்த்து இருக்கின்றோம்
ஆசிரியப் பணியத்தில் தடம் பதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- SAFANA BEGAM IDHROOS
REG.NO :- 15/JNCOE/PT/T/F/221
ADDRESS :- WALAHAVIDDAVEVE, HOROWPOTHANA.
D.O.B :- 15/06/1994



அன்பின் அடைக்கலமாய்
அமைதியின் இருப்பிடமாய்
அன்றொருநாள் பார்த்து மகிழ்ந்தோம்
ஆசிரியப் பணிக்காக
ஆழமாய் தடம் பதிக்க
அல்லாவைத் தொழுகின்றோம்.

NAME :- FATHIMA FASRA ABDUL JABBAR
REG.NO :- 15/JNCOE/PT/T/F/255
ADDRESS :- WARD 08, ERUKKALAMPITTY, MANNAR.
D.O.B :- 23/11/1994



புத்தளத்தில் உதித்த பொற்கதிரே
உம் வருகை அன்று அவனிக்கு புரியவில்லை
நீர் வீசிய கல்விக் கதிரொளிகள்
பாரினிலே பல துறையில் பரந்து நம்
கல்லூரிக்கு அழைத்ததுவே நீர்
பண்புள்ள ஆசானாய் பிஞ்சுகளின் மனதில்
தடம் பதிக்கவென வாழ்த்துகிறோம்
வாழ்ந்திடுவீர் நீரும் நல்லாசானாய்

NAME :- FATHIMA RIFDA MOHAMETH RIYAL
REG.NO :- 15/JNCOE/PT/T/F/214
ADDRESS :- NO 18 KOTTAMPITIYA, KURUNAGELA.
D.O.B :- 13/06/1994



எம் கல்லூரித் தோட்டத்தில்
சிறகடித்துப் பறக்கும் சிட்டுக்குருவியே
உன் சீரிய குணங்கள்தான்
உன் அழகின் ரகசியமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NAME :- SAFAYA SAMATHU
REG.NO :- 15/JNCOE/PT/T/F/216
ADDRESS :- MAINROAD. PALAMUNAI 10.
D.O.B :- 04/05/1994

முக்காடிட்டு மூடிய மங்கையே
நட்பிற்கென நாடிவரும்
வண்டுகள் பல – அதில்
எம் நட்பிற்கென
நாம் சேகரித்த வித்துக்களில்
நீ ஒருத்தி



NAME :- IMZANA NOORI KILABDEEN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/68
ADDRESS :- NELLIYAGAMA, PALAGALA.
D.O.B :- 31/10/1994

இலைகளில் தங்கிய துளிகளாக எம்
இதயங்களில் இணைபிரியா
இடம் பிடித்துள்ளீர்
பணிவான சேவையால்
பாரினில் உயர்ந்திட வாழ்த்துக்கள்



NAME :- SUJATHA KALAMEKAM
REG.NO :- 15/JNCOE/PT/T/F/96
ADDRESS :- WARD NO 03, NILAVELI.
D.O.B :- 24/04/1992

கல்லூரியில் அறிமுகமான தோழியே
பார்த்தவுடன் எம் மனதை கவர்ந்தவளே
உன் கார்குழல் மனதை கிள்ளிடும்
உன் மெல்லிடை மேனியோ அள்ளிடும்
உன் வெள்ளை உள்ளத்தால்
கல்லூரியை மிஞ்சிடும் நாயகியே
உன் ஆசிரியத்துவம் ஓங்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- PUNITHAVATHANI ALAKESAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/208
ADDRESS :- KANTHIKKIRAMAM, KONAVIL, KILINOCHCHI.
D.O.B :- 29/11/1994



பல தடைகளைத் தாண்டி விடைபெற்று
கல்லூரிக்குள் நுழைந்தாய்
ஒளிர்க்கல்வியில் மிளிர்கவே
ஓங்கி நல் வளம் தளிர்கவே

NAME :- FATHIMA NAFRIYA MOHAMMADH NAZAR
REG.NO :- 15/JNCOE/PT/T/F/259
ADDRESS :- 30/20, ADHEPENAR, VAYEL KIN-05.
D.O.B :- 05/10/1994



அறிமுகமில்லா, சந்திப்பில்
ஆர்ப்பரித்து கொண்டோம்
அன்பாய் ஆதரித்து
அறிவுரைகள் தந்தீர்
நடைமுறைகளை துல்லியமாய் - சொல்லி
வியக்கவும் வைத்தீர்
விடைதர விரும்பாமல்
விலகுகின்றோம்
விரைந்து பணியில்
விண்தொட வாழ்த்துக்கள்

NAME :- FATHIMA SAFNA RAFEEK
REG.NO :- 15/JNCOE/PT/T/F/179
ADDRESS :- THOPPUR-02 TRINCO
D.O.B :- 10/02/1994



கணீர் என்ற தொனியில் கல்லூரியைக் கவர்ந்தவளே
கலகலப்பின் இருப்பிடமே
கள்ளங்கபடமற்ற கன்னிகையே
ஆசிரியப் பணியில் மேன்மையுற வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- FATHIMA SUMAIYA MOHAMMED RASIK

REG.NO :- 15/JNCOE/PT/T/F/180

ADDRESS :- 137/1, PALLIVASAL, THURAI PUTTALAM.

D.O.B :- 29/11/1994



அறிமுகமில்லாத உன் புன்சிரிப்பு
மென்மையான உன் பேச்சுக்களால்
குறும்புடன் சேர்ந்த புன்னகையில்
மனதைக் கவர்ந்த உன் கன்னக்குழிகளும்
கற்பனையை சொப்பனமாகப் பொழியும்
உன் கவிக்கு இணையேதம்மா
என்றும் இன்முகத்துடன்
உன் ஆசிரியப்பணி ஓங்க

NAME :- SAFEENA ABDUL AZEES

REG.NO :- 15/JNCOE/PT/T/F/91

ADDRESS :- RATTWEWA, TRINCO.

D.O.B :- 09/06/1993



உங்கள் கனவுகளை நினைவாக்குவதற்கு
கல்லூரி வசம்வந்த வானவிலே
வளர்க புலமை அமிர்தமே
வருக வளமிகு மகுடமே

NAME :- CHRISTY JOY DERRICK

REG.NO :- 15/JNCOE/PT/T/M/01

ADDRESS :- 24 VITHNAS LANE, CHUNDUKULI.

D.O.B :- 24/12/1994



கல்வியின் ஒளி தேடி
கலையுலகின் வழி நாடி
வெற்றியின் நாள் எண்ணி
வீரத்தின் மொழி கூறி
வாழ்த்துகின்றோம் புகழ் சொல்லி
பிரார்த்திக்கின்றோம் இறைவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- RAVEEDRARASA SANJEEVKANTH



REG.NO :- 15/JNCOE/PT/T/M/66
ADDRESS :- 131, WARD NO-01 SALLY, SAMPALTHIVU, TRINCOMALE.
D.O.B :- 14/01/1993

கல்வியில் சீர் பெற்று
கற்பிப்பதில் வளம் பெற்று
கல்லூரியில் புகழ் பெற்று
கடவுளின் அருள் பெற்று
இன்னல்கள் நீ கடந்து
இன்பங்கள் உளமடைந்து
இனிதான வாழ்வடைய
வாழ்த்துகின்றோம் மனமுவந்து

---

NAME :- ELANKESWARAN LAXMAN



REG.NO :- 15/JNCOE/PT/T/M/94
ADDRESS :- SAVALKADDU, ANNAICODDAI.
D.O.B :- 15/03/1994

கல்லூரியின் எமக்குக் கிடைத்த
கவர்ச்சிக் கண்ணே அண்ணா
உன் பார்வை ஒன்றே போதும்
பச்சிளம் குழந்தை கூட
உன்னிடம் பணிந்து வரும்
கல்லூரி வளங்களில் நீ ஒரு சொத்து
காலங்களில் – ஆனாலும் மாறாது
உன் கெத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- FATHIMA SAFFNA AMEEN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/136
ADDRESS :- MADAWAKKULAM, ANDIGAMA.
D.O.B :- 31/03/1994



ஓராண்டு உங்களுடன் இருந்தாலும்
உண்மை அன்பை உணர்ந்தது உங்களிடம்
உம் பண்பினால் பல உறவுகளை சேகரித்து
ஆசிரியர் என்ற பதத்திற்கு முழு
அர்த்தம் கொடுத்து வாழ்ந்தீர்
வாழ்வில் நீர் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

---

NAME :- FATHIMA ASNA SAKEEBUDEEN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/229
ADDRESS :- 354/A NAGAVILLU, PALAVI PUTTALAM.
D.O.B :- 09/12/1994



உறவுப்பாலம் அமைத்தீர்
கல்லூரி காலமதில்
கண்கசக்கி விடைபெற
கேட்கின்றீர் இந்நாள்தனில்
காலச்சக்கர ஓட்டத்தில்-உம்
காலத்தின் கடைசி நாளாய்
கல்லூரியில்
கண்கலங்கி விடைதருகின்றோம்
கணப்பொழுதில்

---

NAME :- LAFEER MOHAMAD SAFRAN
REG.NO :- 15/JNCOE/PT/T/M/177
ADDRESS :- THAMPALAKAMAM, TRINCOMALE.
D.O.B :- 13/11/1994



அமைதியின் உறைவிடம்
அறிவின் சிகரம்
மற்றவர்களை மதித்து பேசுவதில்
நீ மன்னன்-என்றும் உனக்கு
எல்லா வெற்றிகளும் உரித்தாக வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- REVETHI NAKESWARAN

REG.NO :- 15/JNCOE/PT/T/F/89

ADDRESS :- NO-02, NAVALAR ROAD, MULANKAVIL, KILINOCHCHI.

D.O.B :- 20/06/1994



அன்பின் வடிவமாய்
நடனத்தின் சிகரமாய்
மௌன மொழி நடிப்பால்
எம்மைக் கவர்ந்த நாயகி ரேவதி
அவள் பெயர் கொண்ட நீங்களும்
மேடைப் பேச்சாலும் நடிப்பாலும்
கவர்ந்த நாயகி
உம்மை அறிவின் சிப்பியாய் காண்கிறோம்

NAME :- MOHAMED MUSTAFFA NASRIN

REG.NO :- 15/JNCOE/PT/T/F/222

ADDRESS :- MAHASIYAMBALA GASKADA, NERIYAKULAM, MATAWACHCHI.

D.O.B :- 08/10/1993



உன் பர்தா போட்ட
முகத்திலும்
தெத்துப் பல் சிரிப்பிலும்
குழந்தையாய் தெரிகிறாய்
ஆனால்
அறிவிலோ சிகரமாய் நிற்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- ZULFIKA SHEREEN MOHAMED NASEER
REG.NO :- 15/JNCOE/PT/T/F/135
ADDRESS :- NO-83/01, BADRIYA MAWATHA, IHALA KOTTRAMULLA.
D.O.B :- 07/10/1994



முக்காடிட்ட முழு நிலவு நீ எம்
முதல் முதல் கல்லூரி சோதரியும் நீ
கள்ளம் கபடம் உன்னிடத்தில் கண்டதில்லை
கவலையான சாயல் உன் முகத்தில் வந்ததில்லை
நேற்று வந்த உறவானாலும்
நெஞ்சமதில் நிலைத்துவிட்டாய்
நிஜங்களை சுமக்கும் மனதில் – உன்
நினைவலைகளும் என்றும் மாறாது

NAME :- RISMIYA NOOHU LEBBEI
REG.NO :- 15/JNCOE/PT/T/F/04
ADDRESS :- NO-513, SIRAI NAGAR, THAMPALAGAMAM, TRINCOMALE.
D.O.B :- 15/01/1994



உங்கள் பண்பான பேச்சாலும் – உங்கள்
அழகான புன்சிரிப்பாலும் – அனைவரையும்
கவர்ந்த அழகு தேவதையே – உம்
புகழ் எங்கும் பரவ வாழ்த்துகின்றோம்.

NAME :- LOGINI JESUTHASAN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/69
ADDRESS :- NO-60/25, ANTONY'S STREET, PALAIYOOTHU, TRINCOMALE.
D.O.B :- 21/10/1994



உன் அழகினால் எங்கள் மனதினை கவர்ந்திட்ட தோழியே
உங்கள் பிரார்த்தனையினால் எங்கள் மனதினை நிறைத்திட்ட தோழியே
உன் இனிய வார்த்தைகளைக் கூறி சிரிக்கவைத்த
உன் மனதினைக் கண்டு வியந்து பாராட்டுகின்றோம்
என்றும் இறையாசி வளரட்டும் உம் வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- FATHIMA RISMIYA ASEES
REG.NO :- 15/JNCOE/PT/T/F/175
ADDRESS :- NO-41, ANGUNOCHOHIYA,
HOROWPOTHANA, ANURATHAPURA.
D.O.B :- 20/01/1995



அநுராதபுரத்தில் தவழ்ந்த மழலைச் செல்வமே
அன்று தெரியவில்லை பல மழலைச் செல்வங்களுக்காகவே
இந்த ஜனனம் என்று
கொண்ட கனவை நனவாக்கிட ஆகிடுவீர்
ஆரம்பப்பிரிவு மாணவர்க்கெல்லாம் ஓர் தாய் போல்
துணிந்த நடையும் கனிந்த பேச்சும் ஆக்கிடும் உம்மை
நல் ஆசிரியையாய் அந்த பிஞ்சுகள் மனதில்
வாழ்த்துகிறோம் நாமும் மனதார
வாழ்ந்திடுவீர் நீரும் நல்லாசானாக

NAME :- ABDUL GAFOOR FATHIMA SAFNA
REG.NO :- 15/JNCOE/PT/T/F/220
ADDRESS :- NO-771, PODIYAR LANE,
ODDAMAVADY-01 BATTICOLOA
D.O.B :- 25/01/1995



கல்வியியற் கல்லூரியின்
கண்ணியமான அழகி
முதல் சந்திப்பிலேயே
முத்துப் புன்னகை பூத்தமுகம்
அன்புக்கு அடிக்கல்லாய்
ஆசிரிய மாணவியாய்
Safna என்ற பெயரிலே
Soft ஆன ஒரு தோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- JENCY GEORGE
REG.NO :- 15/JNCOE/PT/T/F/70
ADDRESS :- NO-883, MURUGAN KOVIL ROAD,
PALAIYOOTHU, TRINCOMALE.
D.O.B :- 20/06/1994



தளரா மனமும்
தடம் மாறா குணமும் - பெற்ற
தன்னிகரற்ற செல்வியே
உனதான பயணங்களில்
உயர்வான சேவைகள் தொடர
வாழ்த்துக்கள்

---

NAME :- FATHIMA RIKASHA MOHAMED IKBAL
REG.NO :- 15/JNCOE/PT/T/F/100
ADDRESS :- NO-476, MAIN STREET,
PALAIYOOTHU, TRINCOMALE.
D.O.B :- 28/03/1994



முக்காடணிந்த மூன்றாம் பிறையே
முழு மூச்சாக வேலை செய்பவளே
முடிவில்லா கல்வியெனும் பயணம்
தொடர முழுமனதாய் வாழ்த்துகிறோம்

---

NAME :- NIGENTHINI PARANSOTHY
REG.NO :- 15/JNCOE/PT/T/F/62
ADDRESS :- ALVAI ROAD, IMAYANAN WEST,
UDUPPIDDY.
D.O.B :- 25/05/1994



அழகிற்கு அழகு சேர்க்கும் சிகரமே
உன் நடையில் தோற்கும் இவ்வுலகமே
கவிதை எழுதும் கலையரசியாய்
கல்வித் தென்றல் வீசி நல்லுலகில்
நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- MOHAMMADHU ZANOORDEEN FATHIMA AFRANA
REG.NO :- 15/JNCOE/PT/T/F/219
ADDRESS :- NO-296, BANDAWA, POLGAHAWELA
D.O.B :- 22/05/1994



மழலைகளை மனிதர்களாக்க
மனம் உகந்து கற்பித்திடும் உமை
ஏணி போல் என்றும் உயர்ந்திட
உமை மனதார வாழ்த்துகின்றோம்.

NAME :- FATHIMIMA HIMAYA MOHAMED NASEER
REG.NO :- 15/JNCOE/PT/T/F/06
ADDRESS :- KALLANCHI ROAD, KIRIGOLLEWA, RAMBAWA.
D.O.B :- 26/07/1994



கனவுகளை நோக்கி கண்ணீரை சிந்தி
கல்லூரியை விட்டுச் செல்லும் – என் அக்காவே
உன் கனவுகள் நனவாக வேண்டுகிறேன்
இறைவனை – உன் சகோதரராய்...

NAME :- MOHAMED RIYACDEEN RINSA FARWIN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/261
ADDRESS :- NO-18, PERIYAKUDIYIRUPPU, KALPITIYA PUTTALA.
D.O.B :- 31/12/1992



அன்பிற்கு இலக்கணம் நீ
எங்கள் கல்லூரி அழகிற்கு
அகராதி நீ தானடி
எமது கல்லூரியில் பூத்துக்குலுங்கும்
பூக்கள் கூட
உன் அழகைக் காணும் போது
பொறாமை கொள்வது ஏனோ
நீ பல்கலையும் கற்று
சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- MOHAMED THARIQUE JASEERA
REG.NO :- 15/JNCOE/PT/T/F/215
ADDRESS :- KAKKAMUNAI -07, KINNIYA, TRINCOMALE.
D.O.B :- 18/02/1991



கல்வியியற் கல்லூரியில் கால் பதித்த நாள் முதல்
காண்பவர் உள்ளமதில் சோதரியாய் வாழ்பவரே
நீங்கள் பட்டம் பல பெற்று
இந்தப் பார் போற்ற வாழ
எம் வாழ்த்துக்கள்.

NAME :- ABDUL SALAM FATHIMA NIFRA
REG.NO :- 15/JNCOE/PT/T/F/217
ADDRESS :- NO-107/A, COLOMBO ROA, MAIKULAM CHILAW.
D.O.B:- 04/04/1994



நட்புக்கு இலக்கணமானவள் நீ
அழகுக்கு இணையில்லாதவள் நீ
அக்கா என்ற சொல்லின் அர்த்தப் பொருளே
ஆசிரியர் என்ற வாசகத்தின் மகுடப் பொருளே
இன்று போல் என்றும் - பல்கலையும்
பெற்று பல்லாண்டு வாழீ....

NAME :- ASKA BANU MOHAMED RAZEEK
REG.NO :- 15/JNCOE/PT/T/F/150
ADDRESS :- NO-55/36, ARAFATH NAGAR,
KARAMALAIYOOTRU, TRINCOMALE.
D.O.B :- 09/12/1994



எத்தனை எத்தனை உறவுகள்
எமக்குள் வந்துவிட்டுச் சென்றாலும்
அக்கா என்ற ஒரு உறவு என்றுமே
நிலையாய் தொடருமே - இந்த
உலகம் உள்ளவரையும் - என்றுமே
உம் புகழ் ஓங்கி நீர் நீடூழி வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- MOHAMED SALEEM MOHAMMED RISMI
REG.NO :- 15/JNCOE/PT/T/M/213
ADDRESS :- NO-204, DIVULANA, KALINGA ELA, POLANNARUWA.
D.O.B :- 23/07/1994



இனம் மதம் மொழி
பார்க்காதது நட்பு
அதை நிஜம்
செய்தது உம் நட்பு

கல்லூரிப் பகிடிவதை தவிர்த்து எம்
கல்விக்கு உதவியாய் நின்று ..
எமை வழி நடத்தும் சகோதரனானீர்
வேண்டும் என்றும் நின் அன்பு.

NAME :- JALALDEEN RANEESHA
REG.NO :- 15/JNCOE/PT/T/F/257
ADDRESS :- KULUMIWAKKADA, MADHAWACHCHIYA ROAD, ANURATHAPURA.
D.O.B :- 06/10/1994



பல்கலை பொருந்திய
முகிழ்நிலை மொட்டே
புன்னகை பூ சிந்தி
நேர்நடை நடந்து
பொன்னாடைகள் பல பெற்றிட
இன்னாளிலே வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- GRASIAN MICHAEL ANGELO
REG.NO :- 15/JNCOE/PT/T/M/97
ADDRESS :- NO-26/01, CHURCH EAST ROAD, GURUNAGAR, JAFFNA.
D.O.B :- 17/03/1994



கல்லூரி வாழ்வினில்
நான் கண்டுணர்ந்த சிநேகிதன் நீ
ஏக்கமுடன் திரிந்த போது எனக்கு
பல ஏற்ற அறிவுரை நீ உரைத்தாய்
கல்விப் பணியிலே பல
கரைகள் கண்டிடவே
மனமுவந்து வாழத்துகின்றோம்.

NAME :- VAJORTHAN PATHMANATHAN
REG.NO :- 15/JNCOE/PT/T/M/98
ADDRESS :- ALLAVEDDY NORTH, ALLEVEDDY, JAFFNA.
D.O.B :- 10/12/1992



நீண்ட நாள் எதிர்பார்ப்பில்
நீடித்த நினைவுகளாய் மனதில்
நிரந்தரமாய் நின் பணி
நிலைக்க வாழ்த்துகின்றோம்.
காலம் கடந்து கல்லூரி நினைவை
காத்திருக்கும் பதவியதை
காத்திரமாய் தொடர
காவலுமாகும் இறை துணையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NAME :- SUSITHARAN VIJAYAREDNAM
REG.NO :- 15/JNCOE/PT/T/M/122
ADDRESS :- KADAKKARAICHENAI 01, MUTUR.
D.O.B :- 12/04/1994

ஓராண்டு காலமதில்
ஓர் உறவாய் நீ கிடைத்தாய்
தோளோடு தோள் சேர்த்து
தோழமையின் சான்றானாய்
கல்லூரியில் நின் புகழ் கூறும்
கலைக் கோலங்கள் பல படைத்தாய்
யாம் ஏங்கும் நிலைதனில் நீ உயர
யாசிக்கின்றோம் இறைவனிடம்



NAME :- SURAIS DEEN FATHIMA
REG.NO :- 15/JNCOE/PT/T/F/209
ADDRESS :- NO-52, NIKAGOLLA, YATAWATTA, MATALE
D.O.B :- 05/06/1994

கரம் கோர்த்து கற்க வந்த
சில நாட்களிலேயே
சிறகு முளைத்து எம்மை விட்டு
பறக்கவுள்ளீர்
பரீட்சைகள் பல வென்று
பட்டங்கள் பல பெற்று
பாரினிலே உயர்ந்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- NASEEFA BEAGUM KUDHDHOES DHEEN
REG.NO :- 15/JNCOE/PT/T/F/176
ADDRESS :- NO-25, UOOTHUPITY, MURIYAKADAWALA.
D.O.B: - 26/05/1994



பிரியாது இருந்த
பிரிய மலரே
பிரிந்து செல்ல
பிரிவு உபசாரமா?.......
சகோதரியாய்
கை கோர்த்தேன்–அந்நாளில்
கை தேர்ந்தேன்–உம்
பிணைப்பால்
உம் பணி என்றுமே
தேவை இந்த பூமிக்கு

NAME :- SURESH ARULPIRAHASAM
REG.NO :- 15/JNCOE/PT/T/M/239
ADDRESS :- NO-6/128B, SORIKALMUNAI,
SAMMANTHURAI AMPARA
D.O.B :- 10/09/1994



ஆரம்பக்கல்வி பெற்றெடுத்த முத்து
கல்லூரிக்கு கிடைத்த சொத்து
ஆரம்பக்கல்வியை ஊட்டி
சிறு வித்துக்களை விருட்சங்களாக வரவைக்கும்
நீ என்றும் எல்லாம் பெற்றும் வளமாய்
வாழ வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- FAZMINA THAHANY ABDUL AZEEZ
REG.NO :- 15/JNCOE/PT/T/F/120
ADDRESS :- NO-145/06, NIKAGOLLA, YATAWATTA, MATALE.
D.O.B :- 03/02/1994



முக்காடிட்ட முழு மதியே
கலகலப்பின் இருப்பிடமே
கள்ளங் கபடமற்ற கன்னிகையே
பூமியின் தாரகையே
கல்லூரி காலம்தனில்-என்றும்
உன் புகழ் நீங்காது-மலர
வாழ்த்துகின்றோம்.

---

NAME :- ABDUL HAMEED NUSRATH BANU
REG.NO :- 15/JNCOE/PT/T/F/237
ADDRESS :- NO-160B, OLD POST OFFICE ROAD, SAINTHAMUTHU-10.
D.O.B :- 15/10/1994



கல்லூரி வாழ்வில் கிடைத்த
கண்ணியமான சகோதரி நீங்கள்
வஞ்சகமற்ற பேச்சாலும்
வசீகரப் புன்னகையாலும்
விலை கொடுத்து பெற்றிடாத
பொக்கிசம் நீங்கள்
வாழ்வில் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானத்துறை
## (தமிழ்மொழி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- SARANYA NAGARASA
REG.NO :- 15/JNCOE/SC/T/F/127
ADDRESS :- KATPAKKUNAI UDUVIL, CHUNNAKAM.
D.O.B :- 31/08/1993



அன்பின் திருவுருவாய்
அழகின் புகழாய்
தித்திக்கும் பேச்சால்
அனைவரையும் கவர்ந்த
கல்லூரி வளாகத்தில் வலம்வரும்
அழகிய மலரே
உன் வருங்காலம் வளம்பெற
வாழ்த்துகின்றோம்.

NAME :- JEYASHANTHI JAYARATNAM
REG.NO :- 15/JNCOE/SC/T/F/166
ADDRESS :- 32, ABDUL KAFOOR ROAD KINNIYA -01.
D.O.B :- 24/07/1991



கருவிழிக் கண்ணுக்கு மை பூசும் கண்ணழகியே
கலகல பேச்சும் குழந்தைத் தனமும் கொண்டவளே
பழகுவோரை பணியவைக்கும் பண்பான சொல்லாற்றல்
சாந்தமான முகத்துடன் உலா வரும்
ஜெய் சாந்தியே இப்பூவுலகில் உம் புகழ் ஓங்குக.

NAME :- THILAKJANA SATHANANTHASIVAM
REG.NO :- 15/JNCOE/SC/T/F/74
ADDRESS :- CLECKER LANE PATHAMENY ATCHUVELY.
D.O.B :- 18/11/1993



விஞ்ஞானத்தின் விடிவெள்ளியே
விந்தைமிகு வீராங்கனையே
விடியல் உனக்காய் காத்திருக்கின்றது
வீரநடை போட்டு வென்றிடு காலமதை !!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- VENUJA BALASUBRAMANIAM
REG.NO :- 15/JNCOE/SC/T/F/71
ADDRESS :- SELVACHANATHY. THONDAIMANARU.
D.O.B :- 14/12/1994



கனிவான உன் குரலில் தெளிவாக
தேன் மழை பொழிய வைத்த
கல்லூரி இளம் அறிவிப்பாளரே!
உன் வேணுகான குரலின்
திறமை கண்டு வியக்கின்றோம்
விஞ்ஞானத்தில் உன் உயர்வுகாண
வாழ்த்துகிறோம்.... வணங்குகிறோம்...!!

NAME :- KANESHALINGAM NISHANTHAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/77
ADDRESS :- VATHTHIRAJAN NORTH THALAYADY. MARUTHANKENNY.
D.O.B :- 22/04/1993



பிரபஞ்சம் முழுவதும் சூழ்ந்து போன அமைதியும்
ஐன்ஸ்டீன் சிந்தையின் பரந்து நின்ற அறிவும் ஒன்றாய்
இங்கு உன்வடிவில் தினம்
கல்லூரி கொடிநாட்டும் நீங்கள்
வாழ்வில் வெற்றி கொடிநாட்ட வாழ்த்துக்கள்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NAME :- THINUSHSHA CHANDRAKUMAR
REG.NO :- 15/JNCOE/SC/T/F/128
ADDRESS :- "PRAJISTAN" APPIAH LANE KOKUVIL, WEST KOKUVIL.
D.O.B :- 23/11/1992

அன்பாக பேசி எம்மை
அரவணைக்கும் ஆசிரிய அன்பரசியே
விஞ்ஞானத்துறையில் கால் பதித்து
வித்தைகள் பற்பல புரியும் கல்லூரி
முகிழ்நிலை முத்தே உன்னை
போற்றி வாழ்த்துகிறோம்.

---



NAME :- VENUJA MAGENTHIRAN
REG.NO :- 15/JNCOE/SC/T/F/12
ADDRESS :- 16/2, SENIOR LANE KAITADY, JAFFNA.
D.O.B :- 27/03/1993

அன்பான பேச்சினாலும் அழகான நடையினாலும்
எம்மைக் கவர்ந்தவரே!
நீர் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் மேலும் உயர்ந்திட
மனதார வாழ்த்துகின்றோம்.

---



NAME:- SIVANY SOUNTHARARAJAH
REG.NO:- 15/JNCOE/SC/T/F/13
ADDRESS:- DR.SELLATHURAI LANE, SANGARATHAI.
D.O.B:- 21/06/1993

முத்துக்கள் சிந்தும் அழகிய புன்னகையரசி இவள்
பாரதி கண்ட புதுமைப் பெண் இவளோ
நடிகர் திலகத்தின் வம்சாவழி இவளோ
தற்துணிவின் தாயும் இவளோ !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- SRIGANESHAN SANGEVAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/09
ADDRESS :- "NITHTHYANANDAPATHY" KKS ROAD, KONDAVIL WEST, KONDAVIL.
D.O.B :- 26/11/1992



சுருள் முடி கொண்ட உம்மை
அருள் பெற ஆலயம் வரகாண்பேன்
இருள் அகற்றும் ஆசானான நீர்
புகழ் அடைந்து விஞ்ஞான துறையில்
வளர வாழ்த்துகிறோம்.

NAME :- THEIVENTHIRAN RUTHIRAKUMARAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/81
ADDRESS :- VADDUKODDAI, JAFFNA.
D.O.B :- 17/10/1993



தோரணம் கட்டிப்பழக்கி எம்மில்
தொக்கி நின்ற திறைமையை தட்டிவிட்டவரே
காரணம் இல்லாமல் வடைகள் தந்து கால்ப்பந்து
விளையாட்டிலும் கால் பதித்தீரே
மேலும் விஞ்ஞானத்தில் திறம்பெற
வாழ்த்துகிறோம்...

NAME :- MIRUNIKA NITHIYANANTHAN
REG.NO :- 15/JNCOE/SC/T/F/76
ADDRESS :- MADDUVIL SOUTH, CHAVAKACHERI.
D.O.B :- 20/01/1995



விஞ்ஞானம் பெற்றெடுத்த எம் கல்லூரி வியத்தகு அமைதியழகு மங்கையே காபன் தீட்டிய உங்கள் விழிகளில் கற்றலுடன் இணைந்த ஆளுமையை எம் கல்லூரியே கவிபாடி போற்றுதம்மா வாழ்க உங்கள் புகழ் வளர்க உங்கள் முயற்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- MATHIVATHANI VASANTHAKUMAR
REG.NO :- 15/JNCOE/SC/T/F/168
ADDRESS :- KOVILADY THAMPALAKUMAM, TRINCOMALE.
D.O.B :- 21/04/1994



பண்பாக பேசும்
பரிவு நிறைந்த தோழியே
சிரேஸ்ட மாணவர் என்றில்லாமல்
எம்மை சிரிக்க வைக்கும் சிரிப்பழகியே நன்றாக கற்று
நல்வழியில் மேலோங்க வாழ்த்துக்கள்

---

NAME :- VAITHILINGAM SANGEETH
REG.NO :- 15/JNCOE/SC/T/M/75
ADDRESS :- KAITHADY SOUTH, KAITHADY.
D.O.B :- 29/10/1993



கைதடியில் வந்து உதித்த
எம் கல்லூரிக்கு கிடைத்த
ஆலய தொண்டுகள் பல புரியும்
அன்பு நிறைந்த முகிழ்நிலை விஞ்ஞான ஆசிரியரே
விருப்புடன் கல்வி கற்று
விஞ்ஞானத் துறையில் உயரந்து வாழ்க....

---

NAME :- PALANISAMY VENUJAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/08
ADDRESS :- 108, SIVANKOVIL NORTH ROAD, JAFFNA.
D.O.B :- 11/10/1993



விஞ்ஞான மன்றத்தின் விடிவெள்ளியே வியத்தகு சாதனைகளின் சொந்தக்காரனே
கல்லூரிக்கு வந்து நாங்கள்
கண்டுகொண்டோம் இலைமறையான உங்கள் திறமைதனை
பற்பல பட்டங்கள் பெற்று பார் போற்ற வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- DANIEL DANSAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/138
ADDRESS :- NO 14/1, PANANKADDU KOTTU EAST, MANNAR.
D.O.B:- 28/04/1992



சிலுவையதை வணங்கும் உனை
சிறைப்பிடித்த கல்லூரியும்
சலுகை அடிப்படையிலேனும் சற்று
நான் வைத்திராத
அமைதி என்ற சொல்லின் அர்த்தமான உன்னை
தகுதி அறிந்துதான் தலைவணங்கினார்கள் போலும்
பதவி மீது ஆசை கொள்ளாத உன்னையும் பறித்தெடுக்கத்தான்
போகிறது – மன்னார் மண் மீண்டும்

NAME :- KIRUBAKARAN THISHANTH
REG.NO :- 15/JNCOE/SC/T/M/108
ADDRESS :- 16 NAVALAR ROAD AKKARAIPATTU 7/3
D.O.B :- 02/09/1993



வெண்மை நிறம் கொண்டு
வெள்ளை மனம் கொண்டு
கராத்தேயில் கறுப்பு பட்டி பெற்றவனே
காலம் எல்லாம் உன் நாமம் பிறர் சொல்ல
சிறந்த ஆசிரியராய் நீ வாழ வாழ்த்துகின்றோம்
வாழ்க உன் ஆற்றல்



NAME :- DINOTHINI SIVARASA
REG.NO :- 15/JNCOE/SC/T/F/16
ADDRESS :- AALOLAI LANE VADDU SOUTH WEST, VADDUKODDAI.
D.O.B :- 29/04/1993



வட்டுக்கோட்டையிலிருந்து
வண்ணத்துப் பூச்சி ஒன்று
வருடமிரண்டு வட்டமிட
வந்திருந்தது நான் வந்த தோட்டத்திற்கே
வாழ்த்துகிறேன் அன்பு அக்காவே
வானோங்க வேண்டும் உம் புகழ்
வந்தவையும் வருபவையும்

NAME :- KAJUSHANA LANGESWARAN
REG.NO :- 15/JNCOE/SC/T/F/102
ADDRESS :- WARD NO 01 MULLIYAWALAI MULLAITHEVU.
D.O.B:- 03/08/1994



கல்லூரி வந்து உம் கலைதனை
கண்டு கொண்டோம் கயூசனா
உன் கலகலப்புச் சிரிப்பு பார்க்கையிலே
எம் உள்ளம் குளிருதடி...

NAME :- KARTHIGA THARMALINGAM
REG.NO :- 15/JNCOE/SC/T/F/103
ADDRESS :- NO-218 VEVEKANANTHANAGAR WEST KILINOCHI.
D.O.B :- 29/03/1993



கனிவின் உருவமே - நம் கல்லூரி குயில் - கார்த்திகாவே
கல்லூரிக்கு வந்து - நாம் கண்டுகொண்டோம் உங்கள் திறமையை
விஞ்ஞானத் துறைதனை விருப்புடன் கற்பவளே
விஞ்ஞானமே வணங்கும் - உங்கள் வியப்பான கற்பித்தலை
உற்சாகத்துடன் மேற்கொண்டு உயர்ந்து பறக்க உளமகிழ்ந்து
வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- KOKILA PERINPANATHAN

REG.NO :- 15/JNCOE/SC/T/F/10

ADDRESS :- VEMPIRAI ROAD MANTHUVIL EAST. KODIKAMAM.

D.O.B :- 29/09/1994



கோகிலமே போற்றும்
நம் கல்லூரி கோகிலாவே
உங்கள் புகழ் பாட
உலகமே போதாதம்மா...

NAME :- NEELUGA MATHIYAPARANAM

REG.NO :- 15/JNCOE/SC/T/F/18

ADDRESS :- NO-08 3RD CROSS STREET, COLOMBOTHURAI, JAFFNA.

D.O.B :- 25/05/1994



அன்பின் இலக்கணமே
அற்புத அழகுப் புதுமையே
நீலுகா எனும் பெயரில்
நீள்கிறது உன் திறமை

NAME :- SUMITHRA MAGESHWARATHAASAN

REG.NO :- 15/JNCOE/SC/T/F/72

ADDRESS :- ATCHUVELY SOUTH. ATCHUVELY.

D.O.B :- 04/03/1993



கள்ளமில்லாத உன் சிரிப்பினிலே களவு போனது கல்லூரியே
சுமி நீ கல்லூரியின் அழகோவியம் அழகை கொடுத்த இறைவன்
அறிவை கொடுக்கவும் மறக்கவில்லை
கர்ணனின் தங்கையோ என்று எண்ணும் வகையில் கேட்காமலே
உதவிகள் செய்பவரே உன் மந்திர புன்னகையும் மழலை
மொழியும் ஈர்த்திழுக்கும் காந்தம் போன்ற உன் கண்களும்
மயக்கியது சுமித்திரா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- MOHAMMED JAWSY FATHIMA AASHIFA
REG.NO :- 15/JNCOE/SC/T/F/227
ADDRESS :- LEBBAI STREET THARAPURAM, MANNAR.
D.O.B :- 17/09/1992



உதவி என்று கேட்கு முன்னே – எம்
தேவை அறிந்து உதவ முன்வரும்
உடன்பிறவா அன்பு சகோதரியே
உம் வாழ்வு ஒளிபெற இறைவனை
வேண்டி வாழ்த்தி வழியனுப்புகிறோம்.

NAME :- LUXANA SITSABESHAN
REG.NO :- 15/JNCOE/SC/T/F/78
ADDRESS :- GIRLS SCHOOL LANE VIYAPARI MOOLAI, POINT PETRO.
D.O.B :- 16/09/1992



அழகு எதில் உண்டு என்பதை
அறிய ஆவல்
அறிந்தேன் அது உன் குணத்திலென்று
அறிந்ததால் என்னவோ பழக ஆசை
பழகுவோம் வா உன் கனவுகளை
நிறைவேற்றி விட்டு...

NAME :- VETHASORUBI SRITHARAN
REG.NO :- 15/JNCOE/SC/T/F/14
ADDRESS :- THAMBAIYA PANDITHAR ROAD, NAVAALI SOUTH, MANIPPAY.
D.O.B :- 19/06/1993



விஞ்ஞானம் பயிலும்
விந்தை மிகு மலரிவள்
நவாலி ஊர் தந்த நற்குண சொரூபி – எங்கள்
வேதசொரூபி நாநிலம் எங்கும் – உன்
நற்பணி மலரட்டும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- JENCY JEMES SELLATHURAI

REG.NO :- 15/JNCOE/SC/T/F/105

ADDRESS :- SCHOOL ROAD KERUDAVIL SOUTH, THONDAIMANARU.

D.O.B :- 21/10/1993



அமைதியின் தோற்றமே – நீ
பைதகரசின் தேற்றமோ – நின் பெயரின்
விஞ்ஞான விளக்கம் என்னவோ???
சீரிய பணி புரிந்து சிறப்பாய்
வாழ வாழ்த்துகிறோம்...

NAME :- PREMINI PUVANSINGAM

REG.NO :- 15/JNCOE/SC/T/F/178

ADDRESS :- 57 AMMAN KOVIL ROAD KALMUNAI 02.

D.O.B :- 31/10/1994



அமைதியின் உருவேயான
அன்பின் சிகரமே
உம் புன் சிரிப்பில் ஒளிந்திருக்கும்
உம் உள்ளத்து நல்லெண்ணமும்
கல்லையும் கரைக்கும் உம் கனிவான பேச்சும் என்றும்
நிழல் போல் உம்மைத் தொடரட்டும்....

NAME :- ANITHA PIRAGASARASA

REG.NO :- 15/JNCOE/SC/T/F/73

ADDRESS :- NO 12 CENTRAL EAST ROAD, GURUNAGAR, JAFFNA.

D.O.B :- 15/03/1993



கண்டதும் கொள்ளை கொள்ளும் கலைமகளின்
கடைப்புதல்வியே
புன்னகையுடன் பூத்துக்குலுங்கும் விஞ்ஞானத்தின் புதுமலரே
அந்நியமாய் வந்த நமக்கு
அன்புடன் அரவணைத்தாய் அன்பழகியே அனித்தா
மௌனமொழி காக்க வைக்கும் ஆங்கில குயில் நீ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NAME :- SIVASOTHI NADESH
REG.NO :- 15/JNCOE/SC/T/M/79
ADDRESS :- THEMJAMBAI LANE VALVEDDY, THURAI.
D.O.B :- 27/03/1993

இந்துமாமன்றத்தின் இனியவனே-நம்
இதயத்தில் என்றும் நிறைந்தவனே
பிறர் விரும்பும் விதத்தில் அறிவுரை கூறி
பலர் மனதை கொள்ளை கொண்டவனே
உன் பிரிவை நினைக்கையில் நம் கண்கள் வேர்க்குது அண்ணா
ஆனாலும் வித்தகரை வேண்டுகின்றோம்-நம்
அண்ணனின் கனவுகள் நிறைவேற...



NAME :- UMACHANDRAN NISHAANTHAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/104
ADDRESS :- PUNNALAIKADDUVAN NORTH, EVINAI.
D.O.B :- 25/05/1994

ஆழ் கடல் அமைதியின் பிரதிவிம்பம் நீர்
அறிவையும் ஆற்றலையும் கடலெனகொண்டாய்
நட்புக்கு இலக்கணம் உன்னிடம்
பிறந்ததுவோ...



NAME :- CONSTANTINE LENINSIUS
REG.NO :- 15/JNCOE/SC/T/M/106
ADDRESS :- JOSEPVAZ NAGAR,
THODDAVELI MANNAR.
D.O.B :- 11/02/1994

ஆற்றல்கள் அனைத்திற்கும் அரசனானாய்
நட்புக்கு உயிரும் ஆனாய்
விந்தைகள் செய்யும் விஞ்ஞானப்புதல்வனே
உன் பணியை செவ்வனவே தொடர்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- PRABAKARAN THUSYANTHAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/80
ADDRESS :- NO 54 RAMANATHAN ROAD, NAYANMAR KADU.
D.O.B :- 13/03/1994



உயிர்களை உயிருக்கு மேலாய் நேசிப்பவனே
புன்முறுவல் உந்தன் இன்னொரு அடையாளம்
விஞ்ஞானம் உந்தன் செல்லப்பிள்ளை
வியத்தகு விஞ்ஞானியாய்
தரணியில் உயர்ந்திடுவீர்...

---

NAME :- JEYARATNAM AMALRAJ
REG.NO :- 15/JNCOE/SC/T/M/11
ADDRESS :- THUMPALI ROAD, POINT PETRO.
D.O.B :- 08/08/1994



இன்னும் ஆயிரம் வருடங்களுக்கு பின்னர்
தும்பளை மண்ணிலிருந்து வாழப்போகும்
இல்லை ஆளப்போகும்
இளைய தலைமுறைக்கு ஒரு எடுத்துகாட்டாக
நீர் உருவாகு கல்வியிலே

---

NAME :- VIJAYAKUMAR JANARTHANAN
REG.NO :- 15/JNCOE/SC/T/M/17
ADDRESS :- NO 13 PETIYA MADU, MANNAR.
D.O.B :- 13/10/1994



கவிப்பேரரசு வைரமுத்துக்கு நிகராய்-நம்
கல்லூரியில் கவி எழுதும் வல்லமை மிக்கவனே
உன் கவித்திறனை கண்டு மனம் மகிழ்ந்தோம்
இனி கல்லூரியில் காண்போமா நம் ஈழத்து கவிபேரரசு
வாழ்க உன் கவித்திறன்
வாழ்க உன் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானத் துறை
## (ஆங்கில மொழி மூலம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- MOHAMMED KALEEL FATHIMA NAZMIYA
REG.NO :- 15/JNCOE/SC/E/F/170
ADDRESS :- NO-37/B. ELAMALDENIYA MURUTHAGAHAMULA.
D.O.B :- 19/07/1994



கண்டி மலைச்சாரலில் மழலையாய் தவழ்ந்து
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய மாணவியாய் முகிழ்ந்து
ஆசிரியத்துவத்தை உயிர் மூச்சாக்கி விஞ்ஞானத்தில் மிளிர்ந்து
பாடசாலைகளில் மணம் பரப்ப மலராய் விரியும்
இன்றைய சிறு மொட்டு
அன்பிற்குரிய நஸ்மியா அக்காவிற்கு
வாழ்வெனும் வானில் தாரகையாய் மின்னிட
எம் மனமார்ந்த வாழ்த்துக்கள்

NAME :- KAVUSHIHA SREEHARAN
REG.NO :- 15/JNCOE/SC/E/F/107
ADDRESS :- NO-22, RAIL ROAD KOKUVIL EAST, KOKUVIL.
D.O.B :- 18/07/1993



கல்லூரி வரம்பிலே
ஏக்கங்களோடும் தாக்கங்களோடும் வந்த என்னை
தேற்ற வந்த முதல் உறவே நீதானே
வித்தகவிநாயகர் அழைத்தாரே
தினம் உம் தொண்டினை வேண்டி
விலைமதிப்பற்ற சேவைக்காய்
உன்னை வாழ்த்திப்பாட வந்தேன் இனியவளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- MOHAMED NAZEER NAZEEHA BANU
REG.NO :- 15/JNCOE/SC/E/F/36
ADDRESS :- NO-58/6, MOSQUE ROAD, TRINCOMALE.
D.O.B :- 17/05/1994



மௌனத்தால் மொழி பேசி
கனமான பார்வை கதிர்களை வீசி
அரிதாய் தோன்றும் வானவில் போல்
அரிதாகவே எம்மோடு பேசும்
பானு அக்காவிற்கு எங்களின்
மனத்தூறல்கள்

NAME :- MUBARAK FATHIMA DILZANI SABNAM
REG.NO :- 15/JNCOE/SC/E/F/19
ADDRESS :- NO-30/34, PERUNTHERU, KINNIYA - 05.
D.O.B :- 19/10/1994



கின்னியாவிலிருந்து
கல்லூரி பறந்து வந்து
மொட்டாய் மலர்ந்து
சிட்டாய் பறந்து திரியும்
விஞ்ஞானம் தந்த சின்னக்குருவி
டில்ஷானி அக்காவிற்கு
எங்களின் மனத்தூறல்கள்

NAME :- SAFOORKHAN MOHAMED SAJAN
REG.NO :- 15/JNCOE/SC/E/M/183
ADDRESS :- 271, MOSQUE ROAD, KALMUNAI
D.O.B :- 13/08/1993



திசைகருவியின்றி கிழக்கிலிருந்து
வடக்கு பறந்து வந்து திகைக்கும் விஞ்ஞானத்தில்
கடவுள் வடித்த கல்லூரியின் காத்திரமான பாத்திரமே
மாணாக்கரின் எதிர்கால திசைகாட்டியே
சஜான் அண்ணாவிற்கு எங்கள்
வாழ்த்து தூறல்கள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- ARULPANAN UMAKARAN
REG.NO :- 15/JNCOE/SC/E/M/82
ADDRESS :- UDUVIL SOUTH PALAVODAI, MANIPAY.
D.O.B :- 01/11/1993



கடுமையான முகமும்
கவர்ந்திழுக்கும் காரமான பேச்சும்
உங்கள் தமிழ் மொழி பற்றும்
கவிமழை பொழியும் வீரவசனங்களும்
அனைவர் மனதிலும்
ஆனாலும் அன்பான அண்ணா
விந்தை மிகு விஞ்ஞான உலகில்
பல சிற்பங்களை செதுக்கும்
ஆசிரிய சிற்பியாய் மிளிர - எம்
இதயத்தூறல்கள் உமக்காக

NAME :- KIRUSHAGINY MAHENDRAKUMAR
REG.NO :- 15/JNCOE/SC/E/F/15
ADDRESS :- ILAVALAI NORTH, ILAVALAI, JAFFNA.
D.O.B :- 30/08/1993



பார்த்த மாத்திரத்தில் மனதினில் கனத்தீர்கள்
பழகிய விதத்தினில் இதயத்தில் கனிந்தீர்கள்
பொறுமையின் இருப்பிடம் நீங்கள்
இன்றும் என்றும் புன்னகையால் வாழ்வை வென்று
விஞ்ஞான ஆசிரியத்தில் பல சாதனைகளை புரிய
எம் மனமார்ந்த வாழ்த்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணிதப்பிரிவு
## (தமிழ் மொழி மூலம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- INTHUJAH LOGANATHAN
REG.NO :- 15/JNCOE/M/T/F/141
ADDRESS :- 40/1, KALAIMAKAL VEETHY, ARIYALAI.
D.O.B :- 28/08/1994



அரியாலை மண்ணில் பிறந்திட்ட
அமைதியின் உறைவிடம் நீ
மண் போற்றும் ஆசானாக
நீ மிளிர வாழ்த்துக்கள்!

NAME :- NTHUJA PARAMASIVAMPILLAI
REG.NO :- 15/JNCOE/M/T/F/83
ADDRESS :- KKS ROAD, KOKUVIL WEST, KOKUVIL.
D.O.B :- 02/05/1994



பரமசிவம் பெற்றெடுத்த பார்போற்றும் மங்கையே
கருவறை முதல் வகுப்பறை வரை
உன் உறவு உனதருகில்
கல்லூரியின் கலங்கரை விளக்கே
கணிதத்தின் கற்பகத்தருவே
விண்ணுலகமெங்கும் உன் புகழ் பரவ
வித்தக விநாயகரை வேண்டுகிறோம்.

NAME :- ANUSHA ABIMANNASINGAM
REG.NO :- 15/JNCOE/M/T/F/129
ADDRESS :- VARKKARU KARAVEDDY EAST, KARAVEDDY.
D.O.B :- 02/06/1992



யாக்கரையின் கலங்கரை விளக்கே
அபிமான சிங்கத்தின் அற்புத நாயகியே
கல்லூரியின் ஒளியே கணிதத்தின் விழியே
நித்தமும் வணங்கிடுவாய் வித்தக விநாயகரை
கேட்கும் வரம் கிடைக்கும் கேட்பதை நிறுத்தாதே
வானளவு நீ உயர வாழ்த்துகிறோம் வாயார!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- SUJEEVA SIVALINGAM

REG.NO :- 15/JNCOE/M/T/F/153

ADDRESS :- 1ST MILE POST LANE PULOLY NORTH EAST. POINT PEDRO.

D.O.B :- 07/03/1993



வடமராட்சி மண்ணின் தவப்புதல்வியே
வட இந்துவில் தவழ்ந்து
நம் கல்லூரியில் நடை பயின்றவளே
தொடர்ந்து பல பட்டம் பெற்று
கல்வித்துறையில் உயர வாழ்த்துகிறோம்.

---

NAME :- SANGEETHA JEYACHANDRAN

REG.NO :- 15/JNCOE/M/T/F/130

ADDRESS :- YAN NORTH-WEST, MANIPAY ROAD, ARUKALMADAM, ANNAICODDAI.

D.O.B :- 06/04/1993



ஆனைக்கோட்டையின் அற்புதமே
அமைதியாய் வகுப்பிலிருக்கும் சங்கீதமே
கணிதத்தில் நீர் ஒரு சுருதி
அதற்கு மாணவர் யாவரும் அமைதி!

---

NAME :- THARSIKASMYLINI PONRAJAH

REG.NO :- 15/JNCOE/M/T/F/154

ADDRESS :- COLLEGE OF EDUCATION ROAD, KOPAY CENTER, KOPAY.

D.O.B :- 19/01/1994



சிமைலியே நீ எப்பவும் சிமைலி தான்
கம்பீர நடையும் கருணை உள்ளமும்
செக்கச்சிவப்பு இல்லை என்றாலும்
செந்தாமரை மலர்ந்தால் போல் உன்முகம்
உன் சிரிப்பின் இரகசியம் தான் என்ன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- SUBAKIRI BASKARAN
REG.NO :- 15/JNCOE/M/T/F/162
ADDRESS :- EARLALAI WEST, CHUNNAKAM.
D.O.B :- 25/10/1994



கஸ்தூரி விழியால் – எல்லோர்
மனதையும் கவர்ந்திடும் தங்கத்தாரகையே
நீ தட்டும் ஒவ்வொரு வில்லிலும்
உன் திறமை மலரட்டும் எந்நாளும் புகழுடன்
வாழ நாம் வாழ்த்துகின்றோம்!

---

NAME :- MAYURI SIVANESAN
REG.NO :- 15/JNCOE/M/T/F/131
ADDRESS :- KANCHIPURAM, MATHAGAL.
D.O.B :- 30/10/1994



மாதகல் வாழ் மயிலே
கணிதத்தில் நிஷா புயலே
உம் குரல் ஒலிக்க ஆரம்பித்ததும்
கல்லூரியில் அனைவர் காதிலும் பஞ்சாமே!
மாதகலின் மாணிக்கமே
மலர்களின் மகரந்தமே
கல்லூரியின் ஓவியமே
கணிதத்தின் காவியமே
உன் சேவையில் நீ ஒளிர
உளமார வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- GANGA VIGNESWARAN
REG.NO :- 15/JNCOE/M/T/F/158
ADDRESS :- "DAISY VILLA", EARLALAI WEST, CHUNNAKAM.
D.O.B :- 06/08/1993



நட்பாகிப்பழகி நகைபுரியும் நங்கையே
உன் பூமுகம் பார்த்தாலே
கவலைகள் கண்காணா தூரம் ஓடி விடும்
உன் முகம் அணிந்த புன்னகை
என்றும் பொன் நகையாய் உன்னை
அலங்கரிக்க வாழ்த்துகின்றோம்.

NAME :- SUNTHARALINGAM ARANJAN
REG.NO :- 15/JNCOE/M/T/M/167
ADDRESS :- VATTAPPALAI, MULLIYAWALAI MULLAITHIVU
D.O.B: - 07/06/1992



முல்லைத்தீவு போட்ட வித்து
முயற்சியே உங்கள் சொத்து
கலகலவென்ற சிரிப்பு
கண்ணியமான பேச்சு – என்றுமே
கணிதமே உங்கள் உயிர்மூச்சு
நீண்டகாலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

NAME :- SANTHAKUMARAN VENUGESHAN
REG.NO :- 15/JNCOE/M/T/M/22
ADDRESS :- UDUVIL SOUTH, MANIPAY.
D.O.B :- 04/01/1995



தவத்தில் கிடைத்த உடுவையூர் மைந்தா
தன்னலமற்ற பண்பில் உயர்ந்தவரே
இலட்சிய கனவை வென்று
வளமுடன் வாழ்வீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- PARAMASIVAMPILLAI JINTHUJAN
REG.NO :- 15/JNCOE/M/T/M/20
ADDRESS :- KKS ROAD, KOKUVIL WEST, KOKUVIL.
D.O.B :- 02/05/1994



கொக்குவில் இந்துவின் முத்தே
கோடாத ஆளுமையின் வித்தே
ஆற்றல்களின் உறைவிடமே - சிறந்த
ஆசானாக வர வாழ்த்துக்கள் பல!

---

NAME :- SA GOBINATH
REG.NO :- 15/JNCOE/M/T/M/111
ADDRESS :- POOTHANVALAVU, MALLAKAM.
D.O.B :- 07/12/1994



மல்லாகத்தின் மைந்தன்
மற்ஸ் இல் படுவிண்ணன்
கோகுலத்தில் குறும்பு என்றால் அது அந்த கோபி
கொலிஜ் இல் குறும்பு என்றால் அது இந்த கோபி
உணவு விடயத்தில் எப்போதுமே உபசரிப்பார்
உற்ற தோழனாய் என்றுமே உடனிருப்பார்
நீண்ட காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்!

---

NAME :- SOBIYA PARAMALINGAM
REG.NO :- 15/JNCOE/M/T/F/151,
ADDRESS :- GNAVAIRAVAR KOVILADY,
URUMPIRAI SOUTH, URUMPIRAI.
D.O.B :- 16/10/1994



உரும்பிராயின் உத்தமியே
நம் கல்லூரியின் வித்தகியே
கணிதத்தின் நாயகியே கனிவான முகிழ் நிலை முத்தே
காபன் தீட்டிய விழிகளிலே-உன்
கல்லூரியின் பண்பாடு தெரியுதடி
நம் கல்லூரியின் புகழ் மேலோங்க
என்றென்றும் நீர் உழைப்பீராக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAME :- BALENDRAN PARATHAN

REG.NO :- 15/JNCOE/MA/T/M/109

ADDRESS :- THANGODAI, KARAINAGAR

D.O.B: - 27/07/1994



காரைநகரின் தவப்புதல்வனே
இக்கல்லூரியின் சீர்மியவாளனே
இலைமறைக்காய் போல் இருப்பவனே
நின் புகழ் ஓங்குக, இராமனின் தம்பியே!

---

NAME :- PERINPASIVAM PIRASHANTH

REG.NO :- 15/JNCOE/MA/T/M/110

ADDRESS :- PURAPPORUKKI ALADY,
KARANAVAI WEST, KARAVEDDY.

D.O.B :- 03/08/1994



இமையாணன் பெருமை கொள்ளும் பல்துறையாளனே
அமைதியின் மறு உருவமான எம் நெறியாளனே
நாம் கண்ட முதல் கடமை மாணவனே
உன் புகழ் எங்கும் பரவட்டும் பிரசாந்தே!

---

NAME :- THURAIRASASINGAM SUJEEVAN

